முருகப்பெருமான் துணை

**மகான் சூலமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.06.2023, திங்கட்கிழமை

1. மாதருமனே கலியினில் அற்புதம்
மக்களை நோக்கிப் புரிந்து
பூதலம் காக்கவந்த ஞானியே
புகலுவேன் உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
குறைவிலா லாபதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 11 ம் நாள், 26.06.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு சூலமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழிகாட்டி அருளும்
ஞானதேசிகன் திருவடி பற்றி
ஞானம் பயிலும் மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் ஞானிகளாவர்
மரணம் வெல்வர் என்றுகூறி
ஆக்கமுடன் அறிவுரை ஆசியை
ஆற்றல்பட தொடர்ந்து உரைப்பேன்
5. உரைக்கவே அரங்கன் பலம்
உலகம் அடைய வேண்டி
நிறைவான தருமமாக எங்கும்
நித்ய அன்னதானமாகப் பரவிவர
6. வருகவே அரங்கன் அன்னதான
வள்ளல் சேவை தன்னை
வரவேற்று உலக மக்கள்
வழிவிட்டு பின்பற்றித் தொடர்ந்தால்

7. தொடர்ந்தால் அவரவர் துன்பங்கள்
தொலைந்தோடி மாற்றமதும்
இடரின்றி நடத்தல் காண்கும்
எங்கும் தருமமாக நிரம்பி
8. நிரம்பி அரங்கன் கொள்கை
நிலைத்து நின்று உலகினில்
வரம்பிலா வளர்ச்சிக் கண்டு
வையகத்தை காத்தருளும்
9. அருளவே அரங்கன் மார்க்கம்
ஆறுமுகன் மார்க்கம் ஆகும்
அருள்பெற உலக மக்கள்
அடைந்துவிட முழுமை கண்டு
10. கண்டுமே ஞானிகளாகவே
கடைத்தேற்றம் உண்டாகி
தொண்டுவழி இந்த மாற்றம்
தேசம் எங்கிலும் உருவாகி
11. ஆகியே கலியுகம் தானும்
ஆறுமுகனார் ஆசி பெற்ற
மகிமைமிக்க ஞானயுகமாகும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—